---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை

பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல்,

குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை அதிகார சபையால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2. இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| | உரிய தரத்தின் தொடருடன் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு தர நியமம் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் உறுப்படிகளை ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள்கணிப்பீடு செய்ய வேண்டுமாயினும், நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியுள்ள செலவினம் ரூபா. 5,083,432,015 சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்களின் சொத்துக்களின் வகுப்பு மட்டும் 2020 ஆம் ஆண்டில் மீள்கணிப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எஞ்சிய அனைத்து சொத்து வகுதிகளுக்கும் ஏற்புடையதாக மீள்கணிப்பீடு பெறுமதிகள் 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் கணக்குப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டு 2021 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கப்படவுள்ளது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 49 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகளின் உறுப்படி-களை மீள்கணிப்பீடு செய்கின்ற-விடத்து குறித்த சொத்துக்கள் உரித்தாகும், சொத்துக்களின் வகுப்பை முற்றுமுழுதாக மீள்-கணிப்பீடு செய்தல் வெண்டு-மாயினும், மீளாய்விற்கான ஆண்டில் மோட்டார் வாகன-ங்களை மீள்கணிப்பீடு செய்கை-யில் அதிகார சபையில் உள்ள 15 மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பீடு செய்வதிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | சில வாகனங்களில் உரிமைகளை கையளிக்கப்பட்டுள்ளதுடன், சில வாகனங்கள் மட்டும் அதிகார சபைக்கு உரியதாக இருந்தன. இது தொடர்பாக கண்டறிந்து இந்தப் பிரச்சினைகளை தீர்க்கு-மாறு கணக்குப் பிரிவால், பணிப்பாளர் நிருவாகத்தை அறிவு-றுத்தப்பட்டது. பணிப்பாளர் நிருவா-கத்தால் மேற்படி பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன், இந்த வாகன-ங்களை நிலையான சொத்துக்-களின் பதிவேட்டிலிருந்து அகற்று-வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம், நடைமுறையல்லாத | இந்த தவறை செவ்வையாக்-குவதற்கு அதிகார சபையால் 2021 ஆம் ஆண்டில் எல்லா சொத்துக்-களையும் மீள்கணிப்பீடு செய்யப்ப- | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்-காலம் வருடாந்தம் மதிப்பிடப்-படாமை காரணமாக செலவினம் ரூபா. 1,216,781,413 ஆன 07 சொத்து வகுதிகள் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருந்த போதி-லும், மேலும் பயன்பாட்டில் இருந்தது. அதன்படி மதிப்பிடப்பட்ட குறைப்பாட்டினை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 3 பிரகாரம் மீள்திருத்தம் செய்வ-தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்-படவில்லை. | ட்டுள்ளதுடன், புதிய மீள்கணிப்பீடு பெறுமதிகளை 2021 ஆம் ஆண்டில் கணக்கு புத்தகங்களில் உள்ளடக்-கப்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்த குறைப்பாடுகளை தற்போது செவ்வையாக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்விற்கான ஆண்டில் சீன தூதரகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா. 5,316,000 பெறுமதியான கணினி மற்றும் அச்சீட்டு இயந்திரங்கள், 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் Deutsche Gesellschaft Fur International Zusammehar beit (GIZ) கருத்திட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 6,475,926 பெறுமதியிலான சொத்துக்கள், உபகரணங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் அரச பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் நிதிக் கூற்றுகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த தவறை 2021 ஆம் ஆண்டில் செவ்வையாக்கும் பொருட்டு 2021.10.21 ஆம் திகதி GRN 19509 ஆம் இலக்க GRN மூலம் நிலையான சொத்துக்களாக அடை-யாளம் காணப்பட்டு, தற்போது கணக்கு புத்தகங்களில் சீராக்கி செவ்வையாக்கப்பட்டுள்ளது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்க-ப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கை இலக்கம் 09 படி ஐந்தொகை திகதியின் பின்னர் நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக போதியளவு தாக்கங்களை ஏற்படுத்துகின்றவைகள் தொடர்பில் நிதிக் கூற்றுகளில் சீராக்கல்களை மேற்கொள்வதாக காண்பிக்கப்பட்டிருப்பினும், 2021 | அதிகார சபையின் சில முன்னாள் அலுவலர்களால் அதிகார சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் சாரம்சப்-படுத்திய விபரம் 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்கு அறிக்கையில் கணக்கீட்டு குறிப்புகள் இலக்கம் 32 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதான 03 வழக்குகளின் பொருட்டு அதிகார | நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆம் ஆண்டின் பெப்ருவரி மற்றும் மார்ச் மாதங்களில் தீர்வுகள் வழங்கியிருந்த 03 வழக்குக-ளுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டியிருந்த மொத்தம் ரூபா.12,942,552 ஆன நட்டஈடு தொடர்பில் மீளாய்-விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளில் ஒதுக்கீடுகள் அளிக்கப்படவில்லை. | சபையால் 2021 ஆம் ஆண்டில் ரூபா. 12,442,152.00 ஆன பணத்தொகை நட்டஈடாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த மூன்று வழக்குகளுக்கு மேலதிகமாக மற்றுமொரு வழக்கு பொருட்டு ரூபா. 50,400,00 ஆன தொகை அதிகார சபையால் செலுத்தப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் முற்று முழுதான விபரம் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக செயலாற்றப்படும். |

### 1.5.4 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஏப்ரல் 03 ஆம் திகதி தொடக்கம் வேலைகளை முடிவுறுத்-தப்பட்டு தற்போது பயன்படுத்தி வருகின்ற ரூபா. 1,261,908 ஆன கட்டிடங்களை மூலதனமயப்படுத்தலு-க்குப் பதிலாக மேற்கொள்கின்ற வேலையாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த கட்டிடங்களுக்கு ஏற்புடையதான தேய்மான செலவினங்களையும் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நாட்குறிப்பேடு இலக்கம் 986/897/898 மூலம் 2021 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக-ளை தயாரிக்கை-யில் செவ்வை-யாக கணக்கிடல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் கணினி மென்பொருள் மற்றும் வலயமயப்-படுத்தல் பொருட்டு மேற்கொண்ட செலவினம் ரூபா. 7,950,619 ஆன தொகை புலனாகாத சொத்துக்களின் கீழ் மூலதனமயப்படுத்தலுக்குப் பதிலாக ரூபா.6,781,722 ஆன மீண்டுவரும் செலவினமாக ரூபா. 1,168,897 ஐ நடைமுறை சொத்துக்-களின்கீழ் முற்பணமாக காண்பிக்க-ப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்விற்-கான ஆண்டில் பற்றாக்குறையான ரூபா. 6,781,722 ஆல் மற்றும் நடைமுறை சொத்துக்கள் ரூபா. 1,168,897 ஆல் அதிகமாகவும், புலனாகாத சொத்துக்கள் ரூபா. 7,950,619 ஆல் குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இத் தவறு 2021 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான நாட்குறிப்பேடு வவுச்சர் இலக்கம் 908 மற்றும் 909 ஆம் இலக்க நாட்குறிப்பேடு மூலம் செவ்வையாக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக-ளை தயாரிக்கை-யில் செவ்வை-யாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சனாதிபதி செயலகத்தால் மீளளிப்புச் செய்யும் அடிப்படையின்கீழ் மேற்கொள்ளப்படுகின்ற "Multi Purpose Development Task Force Training Programme 100,000" கருத்திட்டத்தின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் அதிகார சபையின் நிதியத்தில் செலவிடப்பட்ட ரூபா. 12,470,721 ஐ மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியுமான வருமானமாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது உரிய செலவினத்தை மட்டும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் நடைமுறை சொத்துக்கள் அந்த அளவில் ஒழுங்குமுறையில் அதிகமாகவும் குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தொழில் ஒரு இலட்சம் கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக பணம் வழங்குதல் தாமதமாகியதால் ரூபா 12, 490,921 ஆன தொகை அதிகார சபையின் பணத் தொகையில் செலவிடப்பட்டிருந்ததுடன். உரிய பணத்தொகை 2021 ஆம் ஆண்டின் செயற்படையணியால் வழங்கியவுடன் ஏற்புடைய கருத்திட்டம் மூலம் இந்தப் பணத்தொகை அதிகார சபையிடம் மீளளிக்கப்படும். இவ்வாறான கிடைக்கப்பெற வேண்டிய ஏதேனும் பணத்தொகை இருப்பின் அதற்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளை கணக்குப் புத்தகங்களில் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் பொறுப்பாக செயலாற்றப்படும். | செவ்வையாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின்கீழ் உள்ள கிளிநொச்சி ஜெர்மன் கைத்தொழில் பயிற்றுவிப்பு நிறுவனம் அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இரத்மலானை இலங்கை ஜெர்மன் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும், குறித்த கையளித்தலுக்கு ஏற்புடையதாக ரூபா. 290,115,476 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா. 984,094 ஆன பொறுப்புகள் நிதிக் கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் குறித்த நிறுவனத்திடம் ஜெர்மன் நன்கொடையின்கீழ் வழங்கியிருந்த செலவினம் ரூபா. 1,212,751,835 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா. 1,615,789, 921 ஆன உரித்துகள், அதிகார சபையின் நிதிக் கூற்றுகளில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது உரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் எல்லாவற்றையும் அகற்றப்பட்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படும். | செவ்வையாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெற வேண்டிய பணத்தொகை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்கப்பெற வேண்டிய மீதியில் 01 ஆண்டு காலம் தொடக்கம் 15 ஆண்டுகள் வரை அறவிடப்படாத மொத்தம் ரூபா. 38,289,653 ஆன பல்வேறு கடனாளிகளின் மீதி மற்றும் பெறுமதி ரூபா. 1,185,654 ஆன ஊழியர் கடன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், இந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது தொடர்ச்சியாக நடைமுற சொத்துக்களின்கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கிடைக்கப்பெற வேண்டிய பணத்-தொகையினை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணத் தொகை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் நிதி நிலைமை கூற்றில் செலுத்தப்பட வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள 02 ஆண்டுகள் தொடக்கம் 13 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக ரூபா. 92,720,931 ஆன செலுத்தப்பட வேண்டிய முற்பணம், வைப்பு மீதிகள் மற்றும் பல்வேறு கடனாளிகளை சீராக்குவதற்கு அல்லது பொறுப்பல்லாத மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | செலுத்தப்பட வேண்டிய மீதி-களை துரிதமாக சீராக்குதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒழுங்கமையாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | சட்டங்கள், விதி-கள், ஒழுங்கு-விதிகள் என்பவற்-றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநா-யக சோசலிசக் குடியரசின் நிதி | பொலன்னருவை மாவட்ட அலுவலகத்தின் பொருட் பதிவேட்-டின்படி சேனபுர பயிற்சி | பதில் வழங்கப்படவில்லை . | நிதி ஒழுங்கு-விதிகள் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒழுங்குவிதி கோவையில் நிதி ஒழுங்குவிதி 760 | நிலையத்திற்குரிய 13 வகுதிகளைச் சேர்ந்த 108 பயிற்சி உபகரணங்களின் உருப்படிகளில் பற்றாக்குறை உள்ளதாக கணக்காய்வின்போது வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டது. | | நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு யூலை 18 ஆம் திகதிய 03/ 2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அனுமதியின்றி தமது நிறுவனங்களில் பதவியணி ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியணியிடம் சம்பளம் படிகள் செலுத்துவதை தவிர்க்கப்படுதல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கையில் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் திறைசேரியின் அனுமதியின்றி அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் பின்பற்றாது ஒப்பந்த அடிப்படையின் மீது 47 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2017 ஏப்ரல் 20 மே திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வு திட்டம். | i. மிக விசேடமான செயலாற்றுகையின்கீழ் தரமுயர்வுகளை வழங்குதல் 2013 ஒக்டோபர் 11 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் இடைநிறுத்தப்பட்டிருக்கையில் முகாமைத்துவ மட்டத்தின் 03 அலுவலர்களுக்கு பிரதி பணிப்பாளர் பதவிகளுக்காக 2015 ஆம் ஆண்டு யூன் 01 ஆம் திகதி தரமுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. குறித்த பதவிகள் வலுவடையாதென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 22 ஆம் திகதி அதிகார சபையிடம் அறிவிக்கப்பட்டிருப்பினும், 2022 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி வரை குறித்த பதவிகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கணக்காய்வால் இவ்விடயங்களை சுட்டிக்காட்டப்பட்டு 1 1/2 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் சென்றிருப்பினும், இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.<br><br>ii. பிரதி பணிப்பாளர் பதவிகள் வலுவற்றது என்று அறிவித்திருக்கையில் ஆட்சேர்ப்புகள் மற்றும் தரமுயர்வு திட்டங- | பதில் வழங்கப்படவில்லை . | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகள் பிரகாரம் தவறான நியமனங்கள் வழங்கியிருந்த பதவிகளை இரத்துச் செய்தல் வேண்டும். |

களின் படி தகைமைகளை பூர்த்தி செய்யாத 02 அலுவலர்களின் பொருட்டு பணிப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒரு அலுவலருக்கு 2019 ஆம் ஆண்டு யூலை 01 ஆம் திகதி தொடக்கம் கணக்காய்வு திகதியான 2022 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி வரை பணிப்பாளர் (பயிற்சி) பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 43,708,450 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 187,171,008 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 143,462,546 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு ஏனைய பயிற்சி செலவினங்கள், ஊழியர் செலவினங்கள் மற்றும் அலுவலக செலவினங்கள் குறைவடைதல் பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்காக முழுநேரகால கற்கைநெறிகளின் பொருட்டு பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சையில் பயிலுநர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மோசடியான வகையில் மேற்கொண்டதன் காரணமாக, தகைமைகளை பெற்றுக் கொண்டிருந்த 30 பயிலுநர்கள் இருக்கையில், தகைமைகளை பெற்றுக்கொள்ளாத 20 பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்த விடயங்கள் கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்டு 02 ஆண்டுகள் சென்றிருப்பினும், முறைக்கெடுகளை மேற்கொண்ட அலுவலர்கள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி வரை எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | வெளிப்படைத் தன்மையுடன் போட்டிப் பரீட்சையின் பெறபேறுகள் மீது பயிலுநரகளை தெரிவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கல்வி அமைச்சின் ஒதுக்கீடுகளின்கீழ் நடைமுறைப்படுத்துகின்ற 13 ஆண்டுகள் சான்றுப்படுத்திய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது படிநிலையின்கீழ் 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 186 மாணவர்களின் பொருட்டு ரூபா. 2,170,814 ஐ செலவிடப்பட்டு, பயிற்சிகளைப் பூர்த்தி செய்யப்பட்ட 20 பயிற்சி பெறுநர்களுக்கு மட்டும் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை | சம்பந்தப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களை அண்மித்துக் கொள்வதற்கு போதியளவிலான சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

------------------------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு<br>----------------------------------- | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்<br>------------------------- | பரிந்துரைகள்<br>--------------- |
|---|---|---|---|
| (அ) | 2007 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் உதவு தொகை கணக்கிடுகையில் வாழக்கைச் செலவுபடி கவனத்தில் கொள்ளாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 8,732,754 ஆன மிகை கட்டணம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்தின் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய உதவு தொகை ரூபா. 58,908,280 ஐ சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக அதிகார சபையின் கடந்த ஆண்டின் இலாபம் மற்றும் மீளாய்விற்கான ஆண்டின் இலாபத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்தது. | இந்த தொகை ஊழியர்களிடமிருந்து அறவிடுகையில் சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இந்த பிரச்சினைகள் காரணமாக இந்த பணத் தொகையினை ஊழியர்களிடமிருந்து மீண்டும் அறவிடல் கஷ்டமாகியதுடன், அதிகார சபையிடம் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளைக் கொண்டு இந்த பணத் தொகையினை செலுத்துவதற்கு இறுதியில் தீர்மானிக்கப்பட்டது. | அலவலர்களின் வினைத்திறனின்மை காரணமாக இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆகையால் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து அறவிடுதல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் ஆயத களஞ்சியத்தில் பொருட் பதிவேடு 2011 ஆம் ஆண்டில் காணமல் போயிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியிலும் அது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளவில்லை என்பதுடன், தற்போது களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் /உபகரணங்களை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு முறையான அனுமதிக்கமைவாக புதிய பொருட் பதிவேடு பராமரிப்பதற்கும், பொருட் | பதில் வழங்கப்படவில்லை | தற்போது களஞ்சியத்தில் காணப்படுகின்ற பொருட்கள் / உபகரணங்கள் என்பன செவ்வையாக அடையாளம் காணப்பட்டு முறையான அனுமதிக்கமைவாக புதிய பொருட் பதிவேடு பராமரிப்பதற்கும் பொருட் பதிவேடு |

| | | |
|---|---|---|
| பதிவேடு காணமல் போவதற்கான காரணங்களை கண்டறிவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | | ஆவணம் காணமல் போனமைக்கான காரணங்களை கண்டறிவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பயனற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடன் கூடிய சொத்துக்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

---

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுபெத்த கைத்தொழில் பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்தின் பயிலுநர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற தளவாடங்களை விற்பனை செய்யும் நோக்கில 2014 தொடக்கம் 2016 காலப்பகுதிக்குள் ரூபா. 18,847,771 ஐ செலவிடப்பட்டு நிறுவனத்தின் வளாகத்தில் நிருமாணிக்கப்பட்டிருந்த காட்சிக்கூடம் மற்றும் ஒருகொடவத்தை மோட்டார் வாகன கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் ரூபா. 9,172,400 ஐ செலவிடப்பட்டு 2019 திசெம்பர் மாதத்தில் நிருமாணிப்புகளை முடிவுறுத்தியிருந்த மாணவர் விடுதி மற்றும் பதவியணியின் தங்குமிடத்தின் உபகரணங்களுடன், கணக்காய்வு திகதியான 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதி வரை பயன்பாடின்றி காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | நீண்டகாலமாக பயனற்றுள்ள சொத்துக்களை உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | பொலன்னருவை மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் மூடப்பட்டுள்ள பயிற்சி நிலையமொன்றில் 297 பயிற்சி உபகரணங்கள் 07 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் பயனற்று காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | நீண்டகாலமாக பயனற்றுள்ள சொத்துக்களை உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |